முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1246

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

26.02.2023, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மபலம் கொண்ட குருராஜனே
   தவபலத்தால் உலகை வெல்லவேண்டி
   ஆறுமுகனென் அவதாரமாக வந்த அண்ணலே
   அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உரைத்திடுவேன் சுபகிருது சாலின் திங்கள்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2023, ஞாயிற்றுக்கிழமை)
   ஞானவான் உன்தர்மத்தை கொண்டு தான்
   ஞானமாக உலகமக்களெல்லாம் ஆற்றல்பெற்று
3. பெற்றுமே இந்த பேருலகில் ஜீவதயவு என்கின்ற
   பிசகில்லாத பிரணவ சக்திகொண்டு
   ஆற்றல்பட உலக மாற்றத்தை
   அரங்கன் உன் அவதார நோக்கமாக
4. மாற்றம்தனில் உலகோரெல்லாம் கலந்துகொண்டு
   மண்ணுலகை ஞான லோகமாக மாற்றி மகிழ்வர்
   மகிழவே ஆறுமுகன் யான் இந்த அற்புதத்தை
   மாதவசி உன் நாமத்தைகொண்டே இயக்க உள்ளேன்
5. ஆற்றல்பட உன்வழி தொடர்ந்துவரும்
   அடியவர்களான உன் தொண்டர்கள் அனைத்துபேரும்
   மாற்றம் தனை இந்த கலியினில் ஞானிகளாகவே
   மகத்துவம் கூடி உயர்ந்து நிற்பர்
6. நிற்கவே சன்மார்க்கம் என்கின்ற அரங்கன்
   நீதிநெறியே இந்த உலகை மாற்றும்
   துன்பம் இல்லாத ஞான லோகமாக தூய்மைகொண்ட ஞானவான்கள் ஆட்சியாக
   இன்பமான ஞான யுகமாற்றமாக இனிதே அரங்கன் உன் வழிகாட்டலே வெற்றியாக்கும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–